சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

VOL-IX. தொகுதி-௯.	JANUARY. ஜனவரி 1914.	No-6. பகுதி-6.

ஊக்கமது கைவிடேல்.

பொருளாலோ, கல்வியாலோ, தவத்தாலோ, ஞானத்தாலோ மேம்பட்டிருப்பவர் யாவரென்று நோக்குவோமாயின், அவர் ஊக்கமுடையவரென்பது நன்கு விளங்கும். ஊக்கமில்லாதவர் எக்காரியத்தையுஞ் செவ்வையாகச் செய்து முடிப்பதேயில்லையாம். முன்னே அற்பராகக் காணப்பட்டுப் பின்னே பெரியவராகக் காணப்பட்டவ ரியாவரும் ஊக்கத்தினால் முன்னுக்குவந்தவரே யாவர்? நம்மனோருள் ஒவ்வொருவரும் தாம் உயர்ந்து தோன்ற வேண்டுமென்று விரும்புவ தியல்பன்றோ? உயர்ந்துதோன்றுவதற்குக் காரணம் யாது? அஃதூக்கமே யன்றோ? அவ்வூக்கமில்லாமையினாலேயே பலர் தாங் கருதியவாறு உயர்ந்து தோன்றுவதற் குரியவராகா தொழிகின்றனர். ஊக்கமது கைவிடேல் என்று நமது ஞானத்தாயாராகிய ஔவைப்பிராட்டியா ரருளிய தன் பொருள் நீ ஊக்கத்தைக் கைவிடாதிரு என்பதாம்.

ஊக்கமாவது இது பயன்தருவதென்று துணிந்து மேற்கொண்ட காரியத்தில் மனம் சோர்வடைவதின்றிக் கிளர்ச்சி யுடையதாதலாம்.

கைவிடாமையாவது மேற்கொண்ட காரியத்தை யெவ்வாறாக வேனு முடிக்கவேண்டு மென் றதனை விடாதிருத்தலாம்.

ஊக்கத்தைக் கைவிடாதொழுகுவது யாரிடத்திருக்கின்றதோ அவரிடத்துச் செல்வந்தானே வழிகேட்டுக்கொண்டு வருவ

தாம். அஃதாவது ஊக்கமுடையவன் தவறாது செல்வமுடையவனுவா னென்பதாம்.

ஒருவனிடத்து ஊக்கமொன்று மாத்திரமிருக்குமாயின், அவனிடத்துச் சுகத்திற்குரிய வெல்லாப் பொருள்களு மிருப்பனபோலவாம். ஊக்கமில்லாதவன் எவ்வளவு செல்வமுடையவனு யிருப்பினும் அவன் ஒருகாலத்தில் வறியவனுவது தவறுவதேயின்றும். மேற்கொண்ட காரியத்தில் மனந்தளராமையாகிய ஊக்கம் குறையாதிருக்குமாயின், அக்காரியம்முற்றுப்பெறு திருப்பதன்றும். தாம் மேற்கொண்ட காரியத்தைச் செம்மையாகச் செய்து முடித்தவரெல்லாம் தைரியமென்னு மூக்கத்தைச் சிறிதேனும் விடாதிருந்தவரென்று நாம் நன்குணர்தல் வேண்டும். ஊக்கமுடையவர் தாம் பெற்றுள்ள பொருள்களை யிழந்தாராயினும், அவர் மீண்டும் அவற்றை யெவ்வாற்ருலேனும் பெறுதற்குரியவராவர். ஊக்கமுடைமை †இம்மைப்பயன், மறுமைப்பயன், மோட்சமென்னு மூன்றனையும் தருவதற்குரியதாக விருத்தலின், அதனை மேற்கொண்ட காரியத்தைச் செய்து முடிப்பதில் மெய்வருத்தம், பொருள் நஷ்ட முதலியனவுண்டாதலை நோக்கி விடுவது கூடவேகூடாது. கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், செல்வம் முதலியன ஊக்கமில்லாதவர்க் குண்டாதல் கூடுமோ? ஊக்கமுடையவர் மேம்பட்டு விளங்குவரென்பது நம்மையாளும் ஆங்கிலேயரது மேம்பாட்டை நோக்கினுல் நன்கு விளங்கும். நம்மையாளும் ஆங்கிலேயர் எங்கும் மேம்பாடுற்று விளங்குவதற்குக் காரணம் யாது? அஃது அவரது ஊக்கமேயன்றோ? அவர் மேம்பாடுற்று வாழ்வதை நன்றாகவுற்று நோக்கினுல் ஊக்கமுடையவர் எவ்வாற்ருனும் மேம்பட்டு விளங்குவர்; அஃதில்லாதவர் எவ்வாற்ருனுங் கீழ்ப்பட்டு விளங்குவ ரென்பது மலை மீது தோன்று மதி (சந்திரன்) போன்று நன்கு விளங்குவதாம்.

"தோட்டியைப்போ லுழைக்கவேண்டும்; துரையைப்போற் சுகிக்கவேண்டும்" என்னும் பழமொழிக்கு யார் இலக்கியமாவர்? ஊக்கமுடையவ ரன்றோ? மேற்கொண்ட காரியத்தைச் செய்து முடிப்பதில் தோட்டியைப்போ லுழைத்து வருபவரன்றோ துரை

† இம்மைப்பயன் - இப்பிறப்பிலடையும் சுகம்; மறுமைப்பயன் - இனி வரும் பிறப்பி லடையும் சுகம்; மோட்சம் - துக்கமென்பது சிறிதேனுமின்றிச் சுகவடிவமாக விருக்கும் நிலை.

யைப்போலச் சுகத்தை யடைதற்குரியாராவர்? மேற்கொண்ட காரியத்தைச் செய்து முடிப்பதில் தோட்டியைப் போல உழைத்து வருபவர் தாம் விரும்பிய பயனை யடைவது பெரும்பான்மையும் தவறுவதின்றாம்.* ஊருணி நீர்போலப் பலர்க்கும் பயன்படுபவர் மக்களுள் மேம்பட்டவராவர். பலர்க்கும் ஒருவர் பயன்படுதற்கு அவரிடத்துப் பொருள் அத்தியாவசியகமாக வேண்டும். பொருள் ஊக்க மில்லாதவரிடத்துக் கிட்டுவதின்மையின், ஊக்கமுடையவர்தாம் பலர்க்கும் பயன்படுதற் குரியவராவர். நாம் மேன்மேலு முயர்ச்சியடைய வேண்டுமென்று நம்மனோருள் ஒவ்வொருவரும் கருதியிருக்கின்றன ரென்பது மறுக்கப்படாத விஷயமாம். அவ்வுயர்ச்சி ஊக்கத்தி னளவாக வுண்டாகின்றது. நீர்ப்பூக்களின் றாளினது நீளங்கள் அவையுள்ள நீரி னளவாக விருப்பது போன்று ஒவ்வொருவர்க்கு முயர்ச்சி அவரவாது ஊக்கத்தினளவினதாக விருக்கின்றது. இதனால் எவ்வளவிற்கெவ்வளவு ஊக்க மிகுகின்றதோ அவ்வளவிற்கவ்வளவு உயர்ச்சி மிகுமென்பது நன்குவிளங்குவதாம். உயர்ச்சியை விரும்பாதவர் யாருமின்மையின், அஃதுண்டாதற்குக் காரணமாகிய ஊக்கம் ஒவ்வொருவர்க்கும் அத்தியாவசியகமாக வேண்டப்படுவதாம். ஒவ்வொரு நாளும் நாமுயர்ச்சி யடைந்துவர வேண்டுமென்று கருதுபவர்தாம் ஊக்கத்தினை யிடைவிடாதுடையவராவர்; அவ்வாறு கருதித் தாம் மேற்கொண்டுள்ள காரியத்தை யூக்கத்தோடு செய்துவருபவர் தாமேற்கொண்ட காரியத்தைச் செவ்வையாக முடிப்பதுடன், தாங்கருதிய உயர்ச்சியையும் நிச்சயமாகவடைவர். ஒருவர் தமது மேன்மைக்குக் குறைவு நேரிட்டவிடத்தும், தமது ஊக்கத்தை விடுவது கூடாது; ஊக்கத்தை விடாதிருந்தால் குறைவுபட்டது நிறைவடைந்து மிகவும்விருத்தியடைவதாம். மார்க்கண்டேய முனிவர் யமனை வென்று எஞ்ஞான்றும் பதினறுவயதினராயிருக்கும் பாக்கியத்தைப் பெற்றதற்குக்காரணம் அவர் தம்மைப் பற்றிக் கொண்டுபோகக் கோரூபத்துடன் வந்து தமக்கெதிரே நின்று பயமுறுத்திய யமனுக்கஞ்சாது தாமேற்கொண்ட காரியமாகிய சிவபூசையில் ஊக்கமுடையவராக விருந்தமையேயன்றோ? செய்தொழிலில் ஊக்கமுடையவர்க்கு மெய்வருத்தம், பசி, நித்திரை, பிறர்செய்யும் அவமதிப்பு முதலியன தோன்றுவாம். செய்

* ஊருணி - ஊரில் வாழ்வார் தண்ணீருண்ணுங் குளம்.

தொழிலில் அதுசெய்யும்போது தோன்றும் மெய்வருத்தம் பசி முதலியவற்றைநோக்கிமனச் சோர்வடைபவர்தாம் வறுமையென்னும் பிணிக்கு வாய்ப்பான தோழராவர்.

இப்போது இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா ஐக்கியமாகாணம், ஜப்பான் முதலிய தேசத்து வாசிகள் மிகு வுயர்ச்சியடைந்திருப்பதற்குக்காரணம் அவர்களது ஊக்கமேயாம். அவர்கள்ஊக்கமிலராயின் இவ்வளவு மேன்மை யடைதல் கூடுமோ? பயிரிடுதல், வர்த்தகஞ் செய்தல் முதலிய லௌகிக வியாபாரமும், ஈசுவர பூஜை, மெய் வாய் கண் மூக்குச் செவியெனும் ஐம்பொறிகளையு மடக்குதல், மனத்தைத் தீய வெண்ணங்கட் கிடங்கொடாது தடுத்தல் முதலிய வைதிக வியாபாரமும் ஊக்கமில்லாதவர்க்குப் பயன்தருவனவாமோ? லௌகிக வைதிகப் பயன்களை யடைந்தவர் யாவரென்றுநாம் நினைக்கலாம்? அவர் ஊக்கமுடையவரே யாவர்? ஊக்கமில்லாதார் தாம்மேற்கொண்டு செய்யுங் காரியத்தை முடிக்கும் வன்மையில்லாதவரா யிருத்தலின், அவரெந்நற்பயனையு மடைவதே யின்றாம்; ஆனாலவரடையும் பயன் வறுமைப்பிணி முதலியவற்றிற்கு வாசஸ்தல மாவதேயாம். ஊக்கத்தினாலே முயற்சியும், முயற்சியாலே பொருளும், பொருளாலே பிறர்க்கு அவர் வேண்டியதொன்றனைக் கொடுத்தலும், அதனாலே புண்ணியமும், பிறவு முண்டாவனவா யிருத்தலின், ஊக்கமுடைமை ஒவ்வொருவர்க்கும் அத்தியாவசியகமாக வேண்டப்படுவதாம்.

"ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை"

என்னுங் குறள் இங்கு நன்கு கவனிக்கற் பாலதாம்.

THE LIGHT THAT NEVER GOES OUT.

என்று மவியா ஒளி.

"கல்விகரையில, கற்பவர்நாள் சில, மெல்ல நினைக்கிற் பிணி பல" என்றபடி மானிடஜன்ம மெடுத்த நமக்கு நித்தியஸுகத (பேரானந்த) மடையும் மார்க்கங்களைக் கற்பிக்கும் நூல்களை ஆராய்ச்சி செய்யவோ அவகாசமில்லை. உதரபோஷணத்துக்கு உழைப்பதிலேயே நமது வாழ்வு பெரும்பான்மையும் கழிந்துவிடுகிறது. பிறகு சமயகோடிகளில் எதுபோய் எது மெய்யென்ற ஸந்தேகம் வரு

கின்றது. மெய்யறிவு புகட்டக்கூடிய ஆசிரியர்களோ இக்காலத் துர்லபம். போலி ஆசிரியர்களுக்கோகணக்கில்லை. ஐம்புலன்களோ விஷய ஸுகத்தையே நாடிச் செல்கின்றன.

இவ்விதக் குழப்பத்தில் பரமபதத்தை நாடும் ஆன்மா எத்திசையை நோக்கிச் செல்வது? ஜனனமரணமாகிய கடலைத்தாண்ட எந்த மரக்கலத்தி லேறுவது?

விஷபஸுகத்தை நாடலாமா? ஆன்மாவின் யாத்திரையில் ஓரிடத்தில் ஒருகாலத்தில் விஷபஸுகங்களும் அவசிபந்தான். அதனிடத்திருந்து நாம் கற்கவேண்டிய சில பாடங்கள் உண்டு. அவற்றை நாம் கற்கும்வரை அவை அவசிபந்தான். அதன் பின்னர் அதையே ஜன்மஸாபல்யமாய்க் கருதுபவர்கள் தாங்கள்கோருவதை அதனிடத்தில் காணமாட்டார்கள்; ஏனெனின், உலகத்தில் காணப்படும் பொருள்கள் யாவும் அழிவுள்ளன. அத்தகைய பொருள்களின் சேர்க்கை நமக்குச் சுகம் தருமாயின், அவைகளின் பிரிவு நமக்குத் துக்கம் விளைக்கும் என்பது நாம் கூறாமலே புலப்படும். ஆதலால் விஷபஸுகம் நிரந்தர ஸுகமன்றென்று தெளிவாயிற்று.

ஐசுவரியத்திலாவது நிரந்தர ஸுகமுண்டோ? சதுர்வித புருஷார்த்தங்களில் அர்த்தத்தை ஒன்றாய்க் கூறியுள்ளார் பெரியோர். ஆதலால் அதுவும் நமக்கு அவசியந்தான். ஆயினும், செல்வ நிலையாமை திண்ணமாதலால் அஃது அழியாத இன்பத்தைந்தரத் தக்கதல்லவென்று காண்கிறோம். அது மாத்திரமோ? அதைத் தெய்வமாகக் கருதி வழிபடுவர்களுக்கு வரும் இடுக்கண்கள் எத்தனை? பொருளை ஈட்டும் போதும் துன்பம்; ஈட்டிய பொருளைக் காத்தலும் துக்கம்; அஃது அழிந்து போனாலோ அல்லது கைசோர்ந்து போனாலோ துக்கம். ஆகவே ஆதிமுதல் அந்தியம் வரையில் துக்கமே. அல்லது நமது பொருள் அழியாது நம்மிடத்திலேயே இருப்பதாகவே வைத்துக்கொள்வோம். நாளை உடலை விட்டு ஆவி பிரியும்போது கோடிபொன்னிருப்பினும் அவற்றால் பயன் யாது? ஆதலால் பொருளில் நிரந்தர ஸுகமில்லை யென்பது விசிதமாயிற்று.

சரீரஸுகம் நிலைத்ததா? தேகம் ஆத்மாவின் வீடானதால் அதை அலக்ஷியம் செய்தல்கூடாது. தேகாரோக்கியம் அவசியம்

தான். சரீரமோ பஞ்சபூதங்களாலாகியது. நாளை அழிவதாயிற்றே. நூறு வயது வரையில் எவ்வித நோயுமில்லாமல் வாழ்ந்தாலும் உடலின் வலிமைகுன்றி அதைவிட்டு ஆவி பிரியவேண்டிய நாள் ஒன்று திண்ணமாய் வருமே. ஆதலால் தேகாரோக்கியம் அழியாத இன்பம் தரத்தக்கதல்ல.

புத்திரமித்திர களத்திராதிகள் அழியாத ஸுகத்தைத் தருமோ? ஆதியில் சுயநலமின்மை என்னும் பாடத்தைக்கற்பிப்பதற்கு இவர்களே கருவியாயிருந்தார்கள். ஆதலால் நமது யாத்திரையில் ஓரிடத்தில் அவர்கள் அவசியமான கைகாட்டிமரங்கள்தாம். அவர்கள் நம்மோடிருக்கும்வரை அவர்களை அநாதரவு செய்யாமல் அன்போடு போற்றவேண்டுவதவசியமே. ஆயினும் அவர்களும்நாமும் ஒருவரைவிட்டொருவர் பிரியும் நாள் ஒன்றுண்டென்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஆகவே இவர்களிடத்திலும் சாஸ்வத இன்பம் இல்லையென்றேற்பட்டது.

வேதசாஸ்த்ர புராணங்கள் நமக்கு நித்தியஸுகத்தைத்தருமா? நமக்கு நன்னெறி காட்டுவதற்கு அவை இன்றியமையாதவையே. வழியைக் காட்டமாத்திரம் அவை வல்லனவேயல்லது அவ்வழியில் நம்மையிழுத்துச் செல்வது அவைகளாலியலாது. தவிர, வேதசாஸ்திர புராண இதிகாஸங்களின் கரையைக் கண்டவர்களும் ஒரு சாஸ்திரம் ஒரு மாதிரி சொல்கிறது, வேறொன்று இதற்கு எதிரிடையாய்க் கூறுகிறதே; ஒரு பாஷியமும் மற்றொரு பாஷியமும் முரண்படுகின்றனவே என்னும் இவை முதலிய ஸந்தேகங்களுக்கும் குழப்பங்களுக்கும் உள்ளாகி நித்தியஸுகம்இன்னதென்பதையே யறியச் சக்தியற்றவர்களாய்க் காலங்கழித்து விடுகிறார்கள்.

அல்லது ஏதாவது ஒரு ஆசிரியனை யடைந்து அவரது அனுக்கிரகத்தால் பேரானந்தம் அடையலாமா? ஆசிரியன் அவசியமே! அவரல்லவா நமது ஐயந்திரிபுகளை நீக்கி நமக்கு வழியைத் தெளிவாய்க் காட்டுகிறார். ஆனால் ஆசிரியர்களுக்கோ கணக்கில்லை. அவர்களுக்குள்ள வேறுபாடுகளோ அநந்தம். இவர்களுள் எவர் கூறுவதைச் சரியென்றுகொள்வது? வேண்டாம். நாம் ஏதோ ஓராசிரியரை யடுத்து அவர் தாம் ஸத்தியமார்க்கத்தைக் காட்டவல்லார் என்ற பூரண நம்பிக்கை இருப்பினும், அவர் நம்முடன் எப்

போதும் இருப்பீரா? ஒருவரைவிட்டொருவர் பிரியவேண்டிய காலம் நாளைவருமே. அப்போதென் செய்வது? ஆதலால் ஆசிரியருடைய சேர்க்கையும் நமக்குப் பேரின்பத்தைத் தரத்தக்கதாயில்லை.

ஏகாந்தத்தில் நிரந்தரஸுகம் உண்டோ பார்ப்போம். ஏகாந்தம் அவசியமே. அது நன்மை பயக்கத்தக்கதே. ஆனல் அதையே முடிவாகக் கருதுபவன் பாலைவனத்தில் தாகத்தால் வருந்துபவனை ஒப்பான். பிரபஞ்சத்தின் தொந்தரவும் இரைச்சலும் அவனை ஏகாந்தத்தில் அணுகா. தன் மனத்தின் இரைச்சலும் தொந்தரவுமோ அவனுல் பொறுக்கமுடியாதனவாயிருக்கும். ஆகவே ஏகாந்தத்தில் நிரந்தரஸுகமில்லை.

விஷயஸுகம், பொருளீட்டல், நோயின்மை, சுற்றம், சாஸ்திரம், குரு, ஏகாந்தம் இவற்றுள் எதிலுமே அழியாப்பேரின்பம் இலதாயின், அது வசிக்கும் ஆலயம் எங்குதான் உளது?

நன்னடக்கையில் மனிதன் அடைக்கலம் புகட்டும். தன் மனத்தைப் புனிதமான கோயிலாக்கட்டும். தன் மனோவாக்குக்காயங்கள் நிஷ்களங்கமாயிருக்கட்டும். பொறுமையும் அடக்கமும் அன்பும் தன் ஆவியைக்கவரட்டும். பரிபூரணானந்த நித்திய வஸ்துவைத் தன் மனத்தின் கண்ணே திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருப்பதாய் உணர்வான். அத்தகைய மெய்யுணர்ச்சி வந்தவன் அன்பென்னும் குன்றேபாகி ஸுகமோ, துக்கமோ, ஐசுவரியமோ, தரித்திரமோ, ஜபமோ, தோல்வியோ, ஆரோக்கியமோ, நோயோ, விவேகிதர்கள் இருப்பினும், இல்லாவிடினும், ஏகாந்தத்திலோ, சந்தையிலோ, ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஒரே மாதிரி இருப்பான்.

அவனுக்கு இனி வேதசாஸ்திரபுராண இதிகாஸங்களாலோ, ஆசிரியனாலோ ஆகவேண்டியதொன்றுமில்லை; ஏனெனின், மெய்ப்பொருளே அவனுக்கு வழிகாட்டியாய்விட்டது. அவன் வெளித்தோற்றங்கள் எல்லாம்மாயையென்று உணர்ந்துவிட்டான். அவன் மனதில் பயமோ, விஸனமோ இல்லை. அவன் மனது சாந்தியையடைந்து விட்டது. ஒருபொழுதும் அணையாத ஸச்சிதானந்தச் சுடரைத் தன்மனமாகிய திருக்கோயிலில் ஸதா தரிசித்துக் கொண்டேயிருக்கின்றுன்.

K. Rangaswamy Ayangar.

உறுதி மொழிகள்.

வஞ்சகர் நட்பு மாறாத் துயர்தரும்.
மனந்தள ராதான் மாவீர னாவான்.
கடனோடு வாழ்வான் கண்ணிலா னாவான்.
பரமாதர் நேசம் பாவமெ லாந்தரும்.
இறப்ப தெண்ணுவா னிபற்றான் தீவினை.
அடிமைவாழ் வெவர்க்கு மாகா தாகா.
துணையிலான் வாழ்வு துன்பமே பயக்கும்.
புகழ்பெறா திருப்பான் புண்ணிய மில்லான்.
சுயவர்க்கு நீதி கனவிலுந் தோன்றா.
செய்ந்நன்றி கொல்வான் சிதட னாவான்.
அன்பி லான் வாழ்விங் கென்பய னீயும்.?
தகுதியில் லானே தன்னை வியப்பான்.
சர்வமற் றோனே கனவா னென்பான்.
தவமது செய்வா ரவம தொழிப்பார்.
கந்தமி லாப்பூ கல்வியி லாதான்.

நட்பு.

நட்பு என்பது சிநேகம். இது இயற்கை நட்பு, செயற்கை நட்பு எனவிருவகைத்து. இயற்கை நட்பு பிறப்பினாலும் தேயத்தினாலும், செயற்கை நட்பு ஒருவரோ டொருவர் நெருங்கப் பழகுதலினாலும் புணர்ச்சியினாலும் அறிவு ஒற்றுமைப் படுவதினாலும் உண்டாகின்றன.

எந்தமனிதரும் விலங்கு பறவை முதலான உயிர்களும் நட்பில்லாமல் தத்தம் வாழ்நாளை இன்பமாய்க் கழித்தல் சாத்தியமாகாது; அதிலும் மானிடராய்ப் பிறந்தவருள் எவனும் சிற்றின்பலோலனாயும் பேரின்பப் பிரியனாயு மிருந்து இன்பவாழ்வை யடைவது கூடாது. சூரியனது உஷ்ணத்தினாலும் ஒளியினாலும், மழையினுடைய சீதளத்தினாலும், பயிர்களும், புஷ்பங்களும், எவ்விதம் வளர்ச்சியும், அழகும், மேன்மையும், அடைகின்றனவோ அவ்விதமே மனிதர்களும் அழகு முதலியவற்றை அடைகிறார்கள்.

மனிதர்களுக்குப் பிரிய மென்பது உடன் பிறப்பாயிருந்து கண்ட கண்ட பதார்த்தங்களில் பாய்ந்து பற்றச் செய்கிறபடியால், அறிவுதாழ்ச்சியினால் செல்லாவிடத்துச் செல்லும்போது அதனைத் தடுக்கவும், செல்லும் வழியிற் செல்லாதிருக்கும்போது அவ்வழியிற் புகுத்தவும், வினைப்பயனால் துன்பம் நேர்ந்தபோது உடனிருந்து அனுபவிக்கவும், அந்நியோன்யமாய்ச் சம்பாஷிக்கவும், அந்தரங்கமாயும் அவசியமாயுமுள்ள விஷயங்களில் மனமயக்க மடையும்போது உறுதிப்பொருளை நன்குணர்த்தி திடப்படுத்துமவரே நட்பினராவர். "அழிதரு நெறியிற் செலவினை விலக்கி யாம்வழி செலுத்திடூஉம் வினையா, லழிவுவக் தடுப்பி னதற்குட னல்லாந் தாக்கை வேறன் றியா ருயிர்க ளொன்றிவங் கயின்றியுணர்ச்சி யொத்தறா லுணர்தொறு முறு நயம் போலக், கழிமகிழ் நாளும் பயின்றொறும் வளர்க் கலப்பதே நட்பெனப் படுமால்" என்று விநாயகபுராணம் கூறுகிறபடி இப்படிபட்டவர்களுடைய சிநேகத்தைத் தேடிக்கொள்வது "அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப், பேணித்தமராக் கொளல்" என்னும் வள்ளுவர் வாய்மொழிப்படி அரிதான காரியமாம். இவர்கள் நட்பானது "பெரியவர் கேண்மை பிறைபோல நாளும், வரிசை வரிசையாய் நந்தும்" என்றபடி இளம்பிறைபோல் வளர்ந்து இன்பத்தையே மேன்மேலும் பயக்கும். சமாச்சாரப்பத்திரிகைகளையும் சிறப்புவாய்ந்த நூற்களையும் படிக்கப்படிக்கப்புதிய புதிய அறிவும், எண்ணங்களும், விருத்தியாவதுபோல் நண்பரோடு பழகப் பழக நமதனுபவமும், அதனாலாய இன்பமும், பெருகிக் கௌரவத்தை யடையும். "நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க், கினத்தியல்ப தாகு மறிவு" என்றபடி நீரானது வெண்மை நிறமுடையதானாலும், தான்சேர்ந்திருக்கும் நிலத்தினுடைய இயல்புக்குத் தக்கபடி நிறமும் சுவையும் மாறுவதுபோல, நட்புக் கொண்டவர்களுடைய தன்மையைப் போலவே நாமும் மாறுதலடைகின்றோம்.

இல்வாழ்க்கைக்கு முதற்சாதனமாயுள்ள மனைவியை யடைய உறவினர், பெரியோர், வேலைக்காரர்கள் முதலியோர் சுகதுக்க லாப நஷ்டத்திற்குப் பாத்தியப்பட்டவர்களாய் அநேகரிருந்தாலும், நட்பாளன் அன்னியனாயினும் அவனையே இக்காரியத்தில் நம்பிக்கையாயும், பிரதானமாயும் கொள்வது உலகவழக்கே!

ஆதலினால், நம் வாழ்நாளில் அடையக்கூடிய இன்பமெல்லாம் நாம் தேடிக்கொள்ளும் நற் சிநேகத்தைப் பொறுத்தனவாயிருக்கின்றன. அதனாலன்றோ சித்தசலன மற்றுச் சிதாகாசமாய் விளங்கிய பட்டினத்தடிகள் "நல்லாரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே" என்ற திருவாக்கில் நல்லாரிணக்கமும்" என்னும் வாக்கியத்தை முன் வைத்துக் கூறியிருக்கின்றனர்.

அநேகர் நட்பினரை இழக்கும்வரையில் அவர் பெருமையை அறியாமல் இழந்த பிறகு கவலையடைகின்றனர். உண்மையான நட்பினரைக் கூற்றுவனாலும் பிரித்தல் முடியாது. இதனுண்மையை உடனுயிர் நீங்கு முரிமைத்தாய நட்பினை யுடையரா யிருந்த கோப்பெருஞ்சோழனிடத்தும், பிசிராந்தையாரிடத்தும் காணலாம். இவர்களின் சரித்திரத்தை இங்குக் கூறுவதென்றால் அது விரியும்.

ஆகையால், ஒவ்வொருவரும் நல்லோருடைய சிநேகத்தைத் தேடிக்கொள்ள முற்படுவோமாக.

V. சாட்சிநாதன்,
போஸ்டு மாஸ்டர், திருப்புறம்பியம்.

ஸநாதன மாநவ தர்மம்.

(முன் தொடர்ச்சி)

ஸத்யத்தால் பரிசுத்தமான வார்த்தையைப் பேசல்வேண்டும்; மனத்திற்குப் பரிசுத்தமான கார்யத்தைச் செய்தல் வேண்டும். 30

அதிகப்பேச்சு பேசுவதை விடல் வேண்டும்; ஒருவனையும் அவமதித்தல் கூடாது. 31

இந்தத் தேஹத்தை ஆச்ரயித்து ஒருவனுடனும் விரோதத்தைத் தேடுதல் கூடாது. 32

தனக்கு நன்மையைத் தேடுகிறவனாகிய பிரபு, தன்னை நிந்திப்பவரையும், கார்யமுடையோரையும், சிறுவரையும், வயோதிகரையும், வியாதியஸ்தரையும் எப்பொழுதும் மன்னித்தல் வேண்டும். 33

துன்பமுடையோர் நிந்தனை செய்யின், அதைப்பொறுப்பவன் ஸ்வர்க்கத்தில் விளங்குகின்றான்; பிரபுத்தன்மையால், பொறுக்காம லிருப்பானுயின் நரகத்தை அடைகின்றான். 34

செய்த கர்மங்களுக்குப் பலன் மறுஜன்மத்திலுண்டென்று மனத்தால் நிச்சயித்து, மனத்தாலும், வாக்காலும், சரீரத்தாலும் எப்போதும் சுபகார்யத்தைச் செய்தல் வேண்டும். 35

கோபிப்பவனிடத்துக் கோபித்தல் கூடாது. நிந்தித்தவனை க்ஷேமம் விசாரித்தல் வேண்டும். 36

ஞானேந்திரியங்களைந்து, மனம், புத்தி என்னும் இவ்வேழின் துவாரங்களால் வ்யாபிக்கப்பட்ட வார்த்தையை அஸத்யமாகச் சொல்வது கூடாது. 37

ராஜ தர்மங்கள்.

அரசர்கள் செய்யும் தண்டனைக்கு (நான்காவது உபாயத்திற்கு)ப் பயந்து ஸ்தாவரஜங்கமங்கள் யாவும் தத்தமக்குரிய தர்மங்களினின்றும் நழுவுவதில்லை; அதனுல் ஸுகமடைகின்றன. 1

தேசம், காலம், சக்தி, வித்தை யென்னுமிவற்றை உண்மையாகக் கவனித்து, அநியாயம் செய்பவர்களிடத்து உசிதப்படி தண்டத்தை யுபயோகித்தல் வேண்டும். 2

அந்தத் தண்டமே அரசன் புருஷன் நாயகன் சிக்ஷகன் என்றும், நான்கு ஆச்ரமங்களின் தர்மத்திற்குப் பதிலாக உள்ளது என்றும் பெரியோர்கள் ஸ்மரிக்கின்றார்கள். 3

தண்டமே ப்ரஜைகளைச் சிக்ஷிக்கிறது; அதுவே காப்பாற்றுகிறது. யாவரும் நித்திரை செய்யும்போது அதுவே விழித்துக்கொண்டிருக்கிறது. அந்தத் தண்டத்தைப் பண்டிதர்கள் தர்மமென்று அறிகின்றனர். 4

கவனித்துபயோகித்தால் அந்தத்தண்டமானது ப்ரஜைகளைச் ஸந்தோஷிக்கச் செய்கிறது; கவனிக்காமலுபயோகித்தால் அஃது யாவற்றையும் நாசஞ்செய்து விடுகிறது. 5

தண்டிக்கத் தக்கவர்களிடத்துத் தண்டத்தை ஸாவதானமாக இருந்து செலுத்தாவிட்டால், வலுவுடையோர்கள் வலுவில்லாதவர்களைச் சூலத்தினுல் மீன்களை ஹிம்ஸிப்பதுபோல ஹிம்ஸிப்பார்கள்.

ஜனங்கள் யாவரும் தண்டத்தால் வசமாகின்றார்கள். பரிசுத்தனான மானிடன் துர்பலனல்லவா? தண்டத்தின் பயத்திற்காகவே உலகம் அனுபவிப்பதற் குரியதாகின்றது. 7

தண்டத்தை யுபயோகிப்பவனாகிய அரசனை ஸத்யவாதி என்றும், கவனித்துச்செய்கிறவ னென்றும், பிராஞ்ஞ னென்றும், தர்மம் காமம் அர்த்தமென்னு மிவற்றில் பண்டிதனென்றும் பேசுகின்றார்கள். 8

தண்டத்தை நன்குபயோகிக்கும் அரசன் தர்மார்த்த காமங்களுடன் கூடியவனாகின்றான். காமத்தில் கருத்துள்ளவனும், வக்ர ஸ்வபாவமுடையவனும், அற்பனுமாகியவன் தண்டத்தாலேயே கெடுவான். 9

தண்டமென்பது மிகுந்த தேஜஸ். புத்திக் கூர்மையில்லாதவர்கள் அதைத்தரித்தல் முடியாது. தர்மத்தை நழுவவிட்டால் அஃது அரசனையும் பந்து ஜனங்களுடன் ஹிம்ஸித்து விடும். 10

உதவி யில்லாதவனும், மூடனும், லோபியும், புத்தியில்லாதவனும், விஷயஸுகங்களில் ஈடு பட்டவனுமாகியவன் நீதிப்படி அந்தத் தண்டத்தைச் செலுத்துவது முடியாது. 11

பரிசுத்தனும், ஸத்ய வந்தனும், சாஸ்திரப்படி அனுஸரிப்பவனும், நல்ல உதவி யுடையவனும், புத்திமானுமாகிய அரசன் தண்டத்தைத் தரிக்கச் சக்தியுள்ளவன். 12

இந்திரியங்களை ஜயிப்பதில் உபாயத்தை இரவும் பகலுமாகத் தேடல் வேண்டும். ஜிதேந்திரியனாகியவன் பிரஜைகளைத் தன் ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளச் சக்தி பெறுவான். 13

முடிவற்றனவும், காமத்தாலுண்டாகக் கூடியனவுமாகிய பத்து வியஸனங்களையும், கோபத்தாலுண்டாகும் எட்டு வியஸனங்களையும் முயற்சியுடன் தள்ளல் வேண்டும். 14

காமத்தாலுண்டாவனவும், கோபத்தா லுண்டாவனவுமாகிய வியஸனங்களில் பற்றுதலடைந்த அரசன் தானே அர்த்தத்தையும் தர்மத்தையும் இழந்து விடுகிறான். 15

வேட்டையாடுதல், சூதாடுதல், பகலில் நித்திரை செய்தல், அபவாதம், ஸ்திரீகள், மதம், நிர்த்தம், கீதம், வாத்தியம், வீணான நடை ஆகிய இப்பத்தும் காமத்தாலுண்டாவனவாம். 16

கோட் சொல்லுதல், ஸாஹஸம், த்ரோஹம், பொருமை, அஸூயை, அர்த்ததூஷணம், வாக்குக் கடுமை, தண்டத்தின் கடுமை ஆகிய இவ்வெட்டும் கோபத்தா லுண்டாவனவாம். 17

இவ்விருவகையான வியஸனங்களும் லோபகுணத்தா லுண்டாகக் கூடியனவாம். இவ்விருவகைக்கும் இந்த லோபமே மூலமென்று பண்டிதர்கள் சொல்லுகின்றார்கள். ஆகையால் அந்த லோபத்தை முயற்சியுடன் ஜயித்தல் வேண்டும். 18

காமத்தாலுண்டாகும் வியஸனங்களின் வகையில், பானஞ் செய்தல், சூதாடுதல், ஸ்திரீகள், வேட்டை என்னுமிந் நான்கும் க்ரமமாக மிகுந்த கஷ்டத்தைத் தருவனவாமென் றறிதல் வேண்டும். 19

கோபத்தாலுண்டாகும் வியஸனங்களின் வகையில், தண்டத்தின் கடுமை, வாக்கின்கடுமை, அர்த்ததூஷணம் என்னு மிம்மூன்றும் எப்பொழுதும் கஷ்டமுண்டாக்குவதற்கேதுவாவன. 20

இந்தக்கோபத்தாலுண்டாகும் வியஸனங்களின் வகையில், வாக்கின் கடுமைவரையிலு முள்ள ஏழு வியஸனங்கள் எங்கு மிருக்கக் கூடியன. தைர்யமுடையவன் ஒவ்வொரு வியஸனத்திற்கு முன்னுள்ள வ்யஸனத்தை மிகுந்தது என்று அறியவேண்டும். 21

வ்யஸனம், ம்ருத்யு என்னும் இவ்விரண்டனுள், வியஸனம் கஷ்டம் என்று சொல்லப்படுகிறது. வியஸனமுடையவன் கீழே கீழே போகிறான். ம்ருத்யுவை யடைந்தவன் ஸ்வர்க்க மடைகின்றான். 22

அடையாததைப் பற்றி விரும்புதல் வேண்டும். அடைந்ததை முயற்சியுடன் காப்பாற்றல் வேண்டும். காப்பாற்றியதை விருத்தி செய்தல்வேண்டும். வ்ருத்திசெய்ததைச் சற்பாத்ரங்களி லுபயோகித்தல் வேண்டும். 23

எப்போதும் தண்டத்தில் முயலல்வேண்டும். எப்பொழுதும் பௌருஷத்தை விரிவாகக் காட்டல்வேண்டும். எப்போதும் விஷயங்களை அடக்கல் வேண்டும். எப்பொழுதும் சத்துருவின் இடைவெளியை யநுஸரித்தல் வேண்டும். 24

எப்போதும் தண்டிப்பதில் முயன்ற அரசனுக்கு உலகம் யாவும் பயமடைகின்றன. ஆகையால் ப்ராணிக ளெல்லாவற்றையும் தண்டத்தாலேயே கொள்ளல்வேண்டும். 25

கபடமில்லாமலே இருத்தல்வேண்டும். எவ்விதத்திலும்கபடம் கூடாது. எப்பொழுதும் அடக்கமுள்ளவனுகிச் சத்துருக்கள் பிரயோகிக்கும் மாயையைத் தெரிந்துகொள்ளல் வேண்டும். 26

இவனுடைய ரந்திரத்தைப் பிறர் அறிதல்கூடாது. இவன்பிறருடைய ரந்திரத்தைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். ஆமைபோல் அவயவங்களை மறைத்துக்கொள்ளல் வேண்டும். தன்னுடைய கருத்தைக் காப்பாற்றல்வேண்டும். 27

பயிரிடுகிறவன் களையைப் பிடுங்கித் தான்யத்தைக் காப்பதுபோல் அரசன் சத்துருக்களைக் கொல்ல வேண்டும்; ராஜ்பத்தை ரக்ஷிக்கவேண்டும். 28

எந்த அரசன் மோஹத்தால் தன்ராஜ்பத்தைக் கவனியாமல் கிலேசப்படுத்துகிருனே அவ்வரசன் பந்துஜனங்களுடன் விரைவில் ராஜ்பத்தினின்றும் உயிரினின்றும் நழுவுதலடைகிருன். 29

பிராணிகளின் பிராணன்கள் சரீரம் சிரமமடைவதால் நசிப்பதுபோல் அரசர்களின் பிராணன்கள் ராஜ்பகார்யங்கள் குறைவுபட்டால் நசிக்கின்றன. 30

கார்யத்தைக் கவனித்து அரசன் தீக்ஷ்ணமாகவும் மிருதுவாகவு மிருக்கவேண்டும். இவ்விருகுணமுமுடைய அரசனே ஸம்மதனுகிருன். 31

மானிடர்களின் கார்யங்களைக்கவனிப்பதில்வருத்தமுறுகின்றவனும் தர்மங்களையறிந்தவனும் பிராஞ்ஞனும் இந்திரிய நிக்ரஹமுள்ளவனும் குலத்திற் பிறந்தவனுமாகிய முக்யமந்திரியை அந்தமந்திரிக்குரிய ஆஸனத்தி லமர்த்தல் வேண்டும். 32

தான் செய்யவேண்டியது இது என்பதை இவ்விதமென்று யாவற்றையும் செய்து ஸாவதானனுகவும் தவறுதலில்லாதவனுகவும் இந்தப் பிரஜைகளை ரக்ஷித்தல் வேண்டும். 33

இந்த அரசன் ஊழியர்களுடன் பார்த்திருக்க ராஜ்பத்தில் தஸ்கரர் (திருடர்) களால்பிரஜைகள் கதறினல், அந்த அரசன் மரணமடைந்தவனே; ஜீவனுடனிருப்பவனல்ல. 34

க்ஷத்ரியனுக்குப் பிரஜைகளைப் பரிபாலிப்பதே முக்யதர்மம். குறிப்பிட்டபலன்களை அனுபவிக்கிற அரசனே தர்மத்துடன்சேருகிறான். 35

நடேச சாஸ்திரிகள்.

நிலம் எதனால் ஆக்கப்பட்டிருப்பது?

ஒரு வயலில் இருந்தாவது ஒரு தோட்டத்தில் இருந்தாவது ஒரு கை மண்ணை யெடுத்து உற்றுப்பார்! எதனால் அஃது ஆக்கப்பட்டிருப்பது? வெகுநுட்பமாய்ப் பார்த்தபிறகு உன் கையில் இருந்த மண்ணில், ஏதோ சில கரடுமுரடான சிறிய கட்டிகளான கற்களும் மிருதுவான உணர்ச்சியைத் தரத்தக்க மணல், களிமண் முதலியனவும், மரத்தின் மிகு சிறிய வேர் முதலியனவும் கலந்திருப்பதைக் காணலாம். நிலம் முழுமைக்கும் மங்கலான வர்ணம் படிந்திருப்பதேன்? செடிகொடிகளின் அழுகியவஸ்துக்களும், பிராணிகளின் அஸங்கியமான பதார்த்தங்களும் நிலத்தினுள் படிந்து நின்று அழுகி மக்கிப் போவதால் தம்முடன் சேர்ந்த நிலத்தை மங்கலான நிறத்துடன் இருக்கச் செய்கின்றன. கரடுமுரடானவைகளும் மிகவும் கெட்டியுமான கற்கள் வெகு நாட்களுக்குப் பின்னர்க் கண்ணுக்கே தெரியாத அவ்வளவு சிறிய மண்ணாக மாறும் விதத்தையும், ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாமல் மேற்சொன்ன வஸ்துக்கள் (செடி, கொடி, பிராணிகள் முதலியவற்றின் அழுகின பதார்த்தங்கள்) ஒரு இடத்தில் வரவேண்டிய காரணம் என்ன என்பதையும், இனி அறிந்துகொள்வது இனிமையையும் நகைப்பையும் உண்டாக்காமலிராது.

நூற்றுக் கணக்கான வருஷங்களுக்கு முன்னர்க் கட்டப்பட்டு, மேற்பரப்பு வெகு அழகாயும் வழவழப்பாயும் வேலை செய்யப்பட்ட ஒரு கருங்கல் கட்டடத்தைத் தற்சமயம் உற்றுப் பார்ப்போமானால், பார்ப்பவர் மனம் ரமிக்கச் செய்த அந்த அழகும் வழவழப்பும் இல்லாமல் அக்கட்டடம் மங்கலான நிறத்தை யடைந்து குஷ்டரோகம் உள்ளவன் காலில் உள்ளதைப் போலக் கோணலான பல பிளவுகள் அதன் மேற்பரப்பில் இருப்பதை ஸ்பஷ்டமாய் அறியலாம். அதில் வெடிப்புகளிருப்பதன்றி பற்பல துவாரங்களும் காணப்படுகின்றன. அதன்மேல் முன்னர்ச்

செதுக்கப்பட்ட எழுத்துக்களை இப்போது சரிபாக வாசிக்கக் கூடவில்லை; எழுத்துக்கள் இருந்த இடத்தில் பிளவுக்கோடுகள் இருக்கின்றன. காலத்தினால் உண்டான செய்கையைப் பார்த்த ஒருவன் எண்ணுதளண்ணமெல்லாம்எண்ணிமனம்அபர்கின்றான். சுடுகாட்டில் கட்டப்படுகிற ஸமாதிக்கட்டடங்களும் மிகவும் ஒழுங்கு தப்பிக் கெட்டுப்போகின்றன. இவ்விதமே உலகம் முழுதும் நடக்கிறதா? அல்லது, நம்நாட்டில் மாத்திரந்தானா? இல்லை. இவ்வுலகம் முழுதிலுமே இவ்விதமாக நடக்கின்றது.

சந்தேக நிவிர்த்திக்காக உன்கண்ணில் அகப்படுகிற மலைகள், மலைச் சிகரங்கள், பிரம்மாண்டமான பழைய கட்டடங்கள், குகைகள், ஜலப்பிரவாகமான இடங்கள் முதலியவற்றை நடுராத்திரியிலோ அல்லது பட்டப்பகலிலோ எப்பொழுதேனும் உற்றுப்பார். மேற்கூறிய விதமாகவே அவைகள் காணப்படும். ஒவ்வொரு மலையின் அடிவாரத்திலும் சிறுசிறு கருங்கல் கட்டிகளும் தூள்களும் காணப்படுகின்றன. இம்மாதிரியாக எங்கும் இருப்பானேன்? வெட்ட வெளியில் கிடக்கும் மலைகள் அவ்விதம் கட்டாயம் உருவை மாற்றிக்கொள்ளும்.

பூமியின் மேலே விழும் மழைத்துளிகள் நிலத்தின் மேற்பரப்பின் ஸ்திதியை வேறுபடுத்துகின்றன. துளித்துளியாகவும், ஸாமாரியாகவும் பெய்யும் மழையால் பௌதிக மாறுதல்கள் [Cheimcal action] உண்டாகின்றன. அதனால் அநேக வருஷங்களுக்குப் பின்னர் சிறு மலைகள் கெட்டுப்போகின்றன.

ஆகாயத்திலிருந்து வருஷிக்கும் மழை தன்னுடன் கரியமில வாயுவைப் (Carbonic acid) பூமிக்குக் கொண்டு வருகிறது என்பதை எல்லாச் சாஸ்திர நிபுணர்களும் ஒப்புக்கொள்வார்கள். பூமியில் விடப்பட்ட இந்த வாயு பூமியினுள் நுழைந்து விடுகின்றது. அது தன்னுடன் சேர்ந்த சில வஸ்துக்களைத் தின்றுவிடும் குணத்தை யுடையது என்பது குறிப்பிடத்தக்கதேயாம். மலைகளினுள்ளும் நுழைந்து விடும் இந்த வாயு தன்னை நெருங்கிய மலைத்துண்டங்களை உருமாற்றிச் சீர்கெடுக்கின்றது. மழை பெய்யவே ஜலப்ரவாகமும் மலையினுள் சென்று விடுகின்றது. அதிக நாட்கள் கழிந்தாலும், கொஞ்சம் கொஞ்சமாக அது தன்னால் உடைக்கக்கூடிய பாகத்தை யுடைத்துக்கொண்டு உள்ளே ஜலத்தை இருத்திக் கொள்ளாமல் இருப்பதில்லை.

ஆகாயத்திலிருக்கின்ற பிராணவாயு மழைத் தண்ணீரில்கலந்திருக்கின்றதென்பது எவர்க்கும் தெரிந்த விஷயமாம். மலைகளுள் நுழைந்து விடுகிற இவ்வாயு, அவைகளைப்பிரிக்கும் சக்தியை அடைந்திருக்கின்றது. ஒரு துண்டு இரும்பை மந்தாரக் காலத்தில் வெட்ட வெளியில் வைத்து விடுவோமானால், சிலநாட்களின் பின்னர் அத்துண்டு துருப் பிடித்துப்போய்த் தன்னுடைய நிஜ உருமாறிக் கரு நிறத்துடன் இருப்பதைக் காணலாம். அதே இரும்புத் துண்டை இரண்டொரு வருஷங்களுக்குப் பின்னர்ப் பார்ப்போமானால் இரும்பு இருந்த இடம் தெரியாதுபோம். அதுவே துருப்பிடித்துத் தன்னுடைய சாரத்தைக் கெடுத்துவிடுகிறது. அதன் மேற்புறத்தைச் சுரண்டிப்பார்த்தால் அதினின்றும் அழுக்குப் பிடித்த மங்கலான தூள்கள் கீழே விழும். இத்துரும்பு எது? எதெது சேர்ந்து அது ஆகும்? அந்த இரும்புடன் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பிராணவாயு கலந்து, தன்னுடன் சேர்ந்த அதை இருந்த இடம் தெரியாமல் தொலைத்துத் துரும்பு என்னும் அஸங்கியமான குழந்தையைப்பெற்று விடுகிறது.

இரும்புத்துண்டுக்கோ அல்லது பேனைக்கத்திக்கோ சம்பவிக்கிற கதி மலைப்பாறைகளுக்கும் கூடிய சீக்கிரத்தில் வாராமற் போனாலும் வெகுகாலத்தின் பின்னர் வந்து சேர்கிறது. பிராணவாயுவை அடக்கி விழுங்கிக்கொள்ளும் அம் மலைப்பாறைகளைத் துரு என்னும் 'சனி' பிடிக்காமல் இருப்பதில்லை. கொஞ்சம் கொஞ்சமாக நாளுக்கு நாள் துருப்பிடித்த அம்மலைப்பாறையின் மீது மழை வெகு மும்முரமாகப் பெய்ததும், பழைய துரு நீக்கப்பட்டு, எந்தச் சமயத்திலும் தன்னுடைய இருப்பைத் தெரிவிக்கும் பிராண வாயுவால் அது தாக்கப்பட, புதிய துரு தனது ஆட்சியை எடுத்துக்கொள்ளுகிறது. இவ்விதமாகப் பாறை கரைக்கப்படுகின்றது.

இவ்வுலகத்தில் பல இடங்கள் மூடுபனியால் மூடப்படுகின்றன என்பதைப் பலர் எளிதில் உணர்ந்திருப்பார்கள். இதனுள் பல வஸ்துக்கள் உடைகின்றன. மூடுபனி என்பது இன்னதென்பதையும் அது கறுப்பா சிவப்பா என்பதையும் நாம் கண்ணால் கண்டவர்களல்ல. ஆனால் பனிக்காலத்தில் குளிரும் ஜில்லிப்பும் வெகு கொடூரமாக நிற்கும்போது, தண்ணீர் நிரம்பிய

குழாய்களும், சாராயப் புட்டிகளும் உடைந்து விடுகின்றன என்பதை மட்டும் கேள்விப்பட்டிருக்கலாம். இவ்வித உடைச்சலுக்குக் காரணம், ஜலம் உறையும்போது அதிக இடத்தை அடைகிறது என்பதேயாம். ஓர் அளவுள்ள ஜலம் உறைந்து பனிக்கட்டியானதும், இப்பனிக்கட்டி அதிக இடத்தைக் கொள்ளுகிறதல்லவா? நெருக்கமான ஒரு மரப்பாத்திரத்தில் ஜலம் பனிக்கட்டியானதும், இப்பனிக்கட்டி தனக்கு வேண்டிய இடத்தைத் தராத அப்பாத்திரத்தை உடைத்து விடுகின்றது. பாத்திரத்தின் பக்கங்கள் மிகவும் கெட்டியா யில்லாவிட்டால், பனிக்கட்டி உண்டாக்குகிற நஷ்டத்திற்கு உடன்பட வேண்டும். (தொடரும்).

S. Vivekanandhan,
மாயூரம்.

ஸ்நுஷாவிஜயம்.

(முன்தொடர்ச்சி)

ஸுசீலன்—(தனக்குள்) கஷ்டம்! காலவசத்தால் அமிருதமும் விஷம்போல் ஆய்விடுகிறது. இவளோவென்றால்—

"எவளுடைய கர்ப்பத்தில் குலத்திற்குக் காரணமாயுள்ள குழந்தை, அக்குலத்தில் உண்டாகிக் கிரமமாகப் பரலோகத்தை அடைந்த பிதிர்க்களை எள்ளுடன் † நிவாபஜலமுங் கொடுத்துத் திருப்தி செய்விக்குமோ அப்படிப்பட்ட மருமகளை விஷமாக நினைக்கிறாள்"; கஷ்டம்! கெட்டவளான இவள், நல்ல வார்த்தையைச் சொன்னபோதிலும் ஒருபொழுதும் அவ்வார்த்தையை அநுஸரிப்பதில்லை.

"பாரியைக்குக் கீழ்ப்படி வேனாயின் வதூவிற்கு விரோதியாக ஆய்விடுவேன். குணமுள்ள புத்திரனவன், அதனால் என்னிடம் விமுகனாக ஆய்விடுவன்; வதூவினிடத்தில் ‡ பரித்தை அடைந்தால் தாரசை என்னிடம் பொய்யான அபவாதத்தை அதிகமாகக் கற்பித்து விடுவாள்"

ஆனதால், நான் மத்தியஸ்தமாகவே இருக்கிறேன்.

(முன்னே பார்த்து) தாரசையின் தோழி வருகிறாள். இவள் பாரியைக்கு நியாயங் கூறும்பொருட்டு என்னால் முந்தியே ஏவப்பட்டவள். ஆனதால் நான் போகிறேன்.

(போகிறான்.)

† நிவாபம் - சிராத்தம். ‡ பரித்தை - துறவு.

சாருவிருத்தை யென்னும் தாராசையின்
தோழி பிரவேசிக்கிருள்.

தாராசை:—தோழி! சாருவிருத்தே! வெகுகாலமாய் என் வருத்தத்தைத் தெரியப்படுத்துவதற்காக உன்னைக் காண விரும்பிக் காத்துக்கொண் டிருக்கிறேன்.

சாருவிருத்தை:—அடி தோழி! என்னவருத்தம்?

தாராசை:—வெகுகாலமாக எல்லாத் தேவதைகளையும் காணிக்கைகளால் பூஜித்து, பிள்ளை பிறக்கக் காரணமான விரதத்தையும் செய்து மறுபடியும் மஹாப் பிரயாசத்தால் உபவாஸங்களை ஆசரித்துக் கர்ப்பத்தை அடைந்த நான் சிறந்தவனை நல்ல பிள்ளையை அடைந்தேன்—

சாருவிருத்தை:—புண்ணிய விசேஷ மில்லாமல் எப்படி இப்படிப்பட்ட புத்திரன் கிடைப்பான்?

தாராசை:—புத்திரன் குணமுள்ளவ னென்பதற்குத் தடையில்லை—

சாருவிருத்தை:—(தனக்குள்) கஷ்டம்! கெட்டகுணமுடைய இவள் மருமகளிடத்தில் தோஷங்களை ஆரோபணஞ்செய்ய ஆரம்பிக்கிருள்.

(பிரகாசமாக) எவன் துர்க்குணனென்று வருத்தப்படுகின்ருய்?.

தாராசை:-எவன் என்று கேட்கின்ருயே.?

சாருவிருத்தை:—உன் பெண்ணின் கெட்ட குணத்தினல் துக்கிக்கிருயா.?

தாராசை:-என்ன கேட்டாய்? என் பெண்ணின் ஸௌஜந்யத்தை அறிந்ததில்லையா நீ? நல்ல கேள்வி கேட்டாய்?

ஒவ்வொரு பட்டணத்திலும் சென்று பந்துக்கூட்டத்தின் ஒவ்வொரு வீட்டிலும் நுழைந்து அநுகூலையான மருமகளையடைய ஆசையுள்ள நானே பிள்ளை நிமித்தம் வெகு சிரமத்தை அடைந்து எவளை ஸம்பாதித்தேனே அவளே என்மனத்திற்குச் சல்லியம் செய்கிருள்.

சாருவிருத்தை:—அடி! அவள் என்ன செய்கிருள்?

துராசை:—கெட்ட ஆசையை யுடைய இவள் சமயம்பார்த்து உட்சென்று என்னால் மறைத்து வைக்கப்பட்ட எண்ணெயை எடுத்துத் தலையில் தடவி வாரிக்கொள்ளுகிறாள். பின்னும்—

ஏதாவதொருநாள் சாயங்காலத்தில் புஷ்பித்த ஜாதி மல்லிகைப் புஷ்பங்களை எடுத்து மயிரை அலங்கரித்துக்கொண்டு நாயகனுக்கெதிரில் விலாஸத்துடன் வருகிறாள்.

சாருவிருத்தை:—இதனால் உனக்கென்ன கெடுதி?

துராசை:—என்ன சொன்னாய்? நாயகனை வசியம் செய்வதின் பொருட்டல்லவா இவளுக்கு இந்தப் பிரயாஸம்!

சாருவிருத்தை:—வசீகரணம் தான் செய்யட்டும். அதனால் தான் உனக்கென்ன கெடுதி?

துராசை:—"வெகு காலமாய் நாயகன்வீட்டை அடைந்த என்பெண் தன்குணங்களால் நாயகனைத் தனக்கு வசமாகும்படி செய்யஎப்பொழுதும்யத்தனம்செய்கிறாள். அவன்தன்தாய்தங்கைகளுக்கு வசமாகிறானே யொழிய அவளுக்கு வசமாகவில்லை. அப்படி யிருக்க என்பிள்ளையை இப்பொழுது எப்படி மனைவிவசத்தனாயிருக்கக்கண்டு சகிப்பேன்?

சாருவிருத்தை—(தனக்குள்)கஷ்டம்! பாபியான இவள் காரணமன்றி † ஸ்நுஷையுடன் சண்டை செய்கிறாள் (பிரகாசமாக) அதற்கு மேல்—

துராசை:—அடி தோழி! வேறொன்று கேள்; தெய்வயத்தனமாக ஒருஸமயம்வந்த என் மாப்பிள்ளையைத்திருப்திசெய்விப்பதற்காக மஹாப் பிரயாஸத்துடன் கொண்டுவரப்பட்ட தயிரை என் உத்தரவன்றி இவள் தன் நாயகனுக்குப் போட்டுவிட்டாள்.

சாருவிருத்தை:—தோழி! உன்வார்த்தையால் அவள் மாப்பிள்ளைக்குப் போட்ட மீதியான தயிரைப் பிள்ளைகுப்போட்டாள் என்று தெரிகிறது. ஆனதால் இவ்விஷயத்தில் என்னகெடுதி?

துராசை:—நன்றாக அறியவில்லை நீ; என் உத்தரவன்றி என்று சொன்னே னல்லவா?.

சாருவிருத்தை:—அதற்கு மேல்.

துராசை:—வேறொன்று கேள்—

ஜன்னல் மார்க்கமா யுலாவும் மந்த மாருதத்தையுடைய தாயும் மனோஞ்ஞமாயு முள்ள, என்னால் என்பெண்நிமித்தம் அமைக்கப்பட்ட பிரதேசத்தைத் தன் நாயகனுடன் சயனத்திரு ப்பதன்பொருட்டு இரவில் முன்னமே நாயகனுடன் கூடப் போ கின்றாள்.

சாருவிருத்தை:—அதுவே உன் பிள்ளையின் படுக்கையா யிருக்கலாம்:—

துராசை:—நிச்சயமாகப் பூஜிக்கத் தகுந்த மாப்பிள்ளை வந் திருக்கும் பொழுது இவன் வெளியில் எங்கேயாவது படுத்துக் கொள்ள வேண்டுமல்லவா?

(தொடரும்.)

M. M. N. Aiyer, Mudikondan.

பயமும் பற்பல தீமைகளும்.

சில வருடங்களுக்கு முன், 'ஹாலிவால்வெள்ளி' (Halley's Comet) தோன்றியபொழுது, உலகத்தி லெப்பாகத்திலும் அறிவு விளக்கமடையாத அநேகர் பயபீதிக்குள்ளானார்கள். அதனால் தற் கொலை செய்துகொண்டனர் பலர்; விநோத வியாதிகளடைந்தனர் பலர்; பூமியழியும் காலம்வந்ததென்று நம்பினர் பலர்; பிள்ளைகளைக் கொன்றபெற்றோர்கள் பலர்; அதைக் கண்ணுற்றதும் சலங்கி மாய் ந்தனர் பலர்; இவ்வாறாக ஆங்கில கிரந்தகர்த்தரொருவர் எழுதி யிருக்கின்றார்.

பல்லாயிர வருடங்களாக யாதொரு திங்குமின்றிச் சுமார் முக்கால்நூற்றாண்டுக் கொருமுறை பூமிக்குத் தோன்றிமறையும் இந்த வால்வெள்ளிக்கு, நாகரீகத்திலும் அறிவிலும் சிறந்து விள ங்கும் இவ்விருபதாம் நூற்றாண்டில் இந்தப்பாடானால், மற்றக் காலத்தைப்பற்றிப்பேசவேண்டியதில்லை. இவ்விதமானபயம்காரண மாக, பல நம்பிக்கைகள் மனிதருக்குள் பரவிவிட்டன. உதாரண மாக, வெறுந் தொட்டிலை அங்குமிங்கும் ஆட்டினால், அவ்வீட்டில் பிறக்கிற பிள்ளைகளெல்லாம் சீக்கிரம் இறந்து போமென்றும், தொ ட்டில் எப்பொழுதும் காலியாகவே யிருக்குமென்றும், சுண்ணாம்பு

கத்திமுதலியவற்றை நண்பன்கையிலேகொடுத்தால் நட்புநாசமாய் விடுமென்றும், இவைபோன்ற பல நம்பிக்கைகள் மிகப்பரவியிருக்கின்றன. முதிர்ந்த மனிதர்களுக்கே இப்படியானால் குழந்தைகள் விஷயத்தில் ஒன்றும் கேட்கவேண்டியதேயில்லை. யார் எது கூறினும் எளிதில் நம்புவதே இளைஞருக்கு எக்காலத்தும் எத்தேசத்தும் இயல்பு. அது பிற்காலம் மாறுவதும் அரிது. "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டு"மன்றோ? பேய் பூச்சாண்டி யென்று இளமையில் குழந்தைகளுக்குப் பயத்தை உண்டுபண்ணுவது, அவர்களுடைய வாழ்நாளையெல்லாம் பாழாக்கிவிடுகின்றது. "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பதும் மிகவும் உண்மை.

ஒருவன் சாப்பிட்டது உண்மையில் தீங்கற்ற மருந்தாயிருந்தும், அதில் விஷங்கலந்திருப்பதாய்த் திட்டமாய் நம்பிவிட்டால், அவன் இறந்துபோவது திண்ணம். அதிகக் கவலையினாலே தலை முழுவதும் முதலாவது சார்லஸ் என்ற ஆங்கில மன்னருக்கு ஒரே நாளிரவில் நரைத்துப்போனதாக அறிகிறோம். தேக சௌக்கிய மிகுதியுமுடையவனும், பெரிய வியாதியொன்று தனக்கு வந்து விடுமென்று நிர்நிமித்தமாய் நினைத்துப் பயந்துகொண் டிருந்தாலும், அங்ஙனமே வியாதி பலுகிவிடுவதை யாவரும் எளிதில் அறிந்துகொள்ளலாம். பயமென்ற பிசாசு நம்மிடமுள்ள தன் மதிப்பு, சுயநம்பிக்கை, சுய உழைப்பு முதலியவற்றை விழுங்கி விடுகிறது. பின்னர், நாம் எதில்தான் ஜயிக்கமுடியும்? எங்ஙனம் ஆநந்த மடையமுடியும்?

'பயமென்பதென்ன?' என்று நெல்சன் சிறு பிராயத்தில் கேட்டதுண்டாம். பீமன், அநுமான் முதலியோர் எதற்குத்தான் பயந்து பின்னடைந்தார்கள்! இத்தகைய சரித்திரங்களைப் படிப்பவர்களுக்கே பயமொழிந்து தைரியம் பிறப்பது இயற்கை. சிவாஜியின் வீரத்தன்மைக்கு இதிகாச சரித்திரங்களைக் கேட்டது தான் முக்கியகாரணமென்று சரித்திராசிரியர்கள் கூறுகின்றார்கள்.

ஜப்பான் இங்கிலாந்து முதலிய நாகரீகத் தேர்ச்சிபெற்ற நாட்டுச் சிறுவர்கள், நம்மைபோலியர்போன்று பயபீதிக்காளாக்கப்படுவதில்லை. கடவுள்பிள்ளைகளாகிய மனிதர்களுக்கு எவ்விதமானபயத்துக்கும் இடமேயில்லை. நமக்கு நாம்தான் தீங்குசெய்ப முடியுமே

தவிர, வேறொன்றாலும் அது முடியாது. தருமரைத் துஷ்டஜந்துக்களும்தொடுவதில்லை யென்பதன் இரகசியந்தானென்ன? அன்பிருக்கும் பொழுது பயம் எங்ஙனம் ஏற்படும்? நேர்மையும் சுத்தமும் நன்மையும்நாடிய ஆன்மா அஞ்சுவதற்கு ஒன்றுமேயில்லையெனப் பொருள்படும்படி (To the good, pure, simple, upright soul, there is absolutely nothing to fear) வில்லி ஆலன் என்ற மாது கூறியிருக்கின்றார்.

அன்பர்களே! பயத்துக்குச் சிறிது இடம்கொடுத்தால், அது முழு இடத்தையுங் கவர்ந்துகொள்வதோடு உங்கள் ஆநந்தத்தையும் சாந்தியையும் அபகரித்துவிடும். ஆதலால் வியாதி, வறுமை, துன்பம் என்பனவற்றிற்கு நீங்களே பயம் என்ற பாதையை உண்டாக்கிக் கொள்ளவேண்டாம். (Say ye to the righteous that it shall be well with him.) நீதிமான்களுக்குச் சகலமும் நன்மையாகவே முடியும் ஆதலால் நீங்கள் ஒவ்வொருவரும் எதையும் "இதுவுமொரு நன்மைக்கே" என்று கருதி, பயத்துக்கிரையாகாமல், இணையிலா இன்பம் எய்துவீர்களாக!

நெல்லை-மாணிக்கவாசகன்.

பூங்காவனம்.

(முன்தொடர்ச்சி).

பூங்காவனம் தன்னை அலங்கரித்துக் கொண்டுவருவதற்காகத் தனது அறைக்குச் சென்று விட்டாள். சிலநிமிஷங்களுக் கிடையில் அவள் தன்னுடைய அறையில் தனித்திருந்தாள். அவளுக்குத் தான் அதிகமாய் நேசித்திருந்தவனுடைய சந்திப்புத் தாங்கிக் கொள்ள முடியாததாயும் வெறுப்பாயு மிருந்தது. சந்தித்த பொழுது தன்னுடைய முழுத்தைரியத்தாலும் மனக்கவலையை யடக்கிக் கொண்டிருந்தனள். தனிமையாயிருக்கும் பொழுது துக்கத்தைத் தாங்கமுடியாமல் குனிந்தபடியே இருகரங்களாலும் கண்களை மூடித் தாரை தாரையாக நீர் சொரியத்தேம்பித் தேம்பி அழுது ஓ! பிதாவே! தாங்கள் வானுலகத்தி லிருந்தாலும் அருமைக்குமாரி அனுபவிக்கும் துன்பத்தை யாவது பார்க்கமாட்

டீர்களா? எனது வாழ்நாள் முழுவதும் துக்கம் அனுபவிக்கும்படியான குற்றத்தைத் தாங்கள் செய்திருந்தாலும் நான் அதை மன்னித்துவிட்டேன். பரமநிருபானுவாகிய கடவுளே! தேவரீரும் அவர் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி பிரார்த்திக்கின்றேன் என்று கூறி அழுது பின் தனக்குள் எண்ணிக் கொண்டதாவது:—"அருட் பிரகாசம் பெரியதந்தையாரோடு பேசும்பொழுது என்னை அவர் பொருட்படுத்தாமற் காட்டின திருப்தியற்ற பார்வையும் எனக்கு இந்நாட்டிலிருக்கக் கொஞ்சமேனும் பிரியமில்லை" என்று கூறியதும் எதற்காகவென்று விளங்கவில்லை. நாங்கள் முன்னர் நேசித்திருந்தது எனது ஞாபகருக்குத் தெரிந்திருக்குமென்று அவர் எண்ணினரோ? இது வீணெண்ணம்; அப்படி இருக்கமாட்டாது. இருந்தால் இப்பொழுது இங்கேவரமாட்டார்; அவருடைய பெருமையே இதனை இதுகாறும் வெளிவிடாது தம்முள் ளடக்கி வைத்திருந்தது. அங்ஙனமானால் இப்பொழுது இங்கு ஏன்வந்தனர்?'அறியாமை நிரம்பப் பெற்றவளாகிய இவள் ஏய்க்கப்பட்டாள்" என்று எண்ணினரோ? அல்லது "இவள் என்னுடைய பெரியதந்தையாரின் கௌரவமான பட்டத்துக்கும் பணத்துக்கும் ஆசைப்பட்டு மயங்கினள்" என்று எண்ணினரோ? எப்படியென்று தீர்மானித்துக் கொள்ளமுடியவில்லையே! இச் சந்தேகம் தீரவேண்டுமே! என்மனம் ஒருதீர்மானத்துக்கும் வரவில்லையே! அவரைத்தனிமையிற்கண்டு உசாவி அறியலாமென்றால் அது ஒருபோதும் கூடாது; ஏனெனின், அது எனது நாயகருக்கு விரோதமும் நம்பிக்கைத் துரோகமும் செய்ததாக முடியும். அப்படிப் பட்டவர் ஏன் இங்குவந்தார்? காதலின் ஞாபகமாகத் தான் முன்னர் மாற்றித்தந்த கணையாழியை வாங்கிக் கொண்டு விசுவாசகாதகி! என்று ஏசுதற்குவந்தாரோ?" என்று பலவாறு எண்ணித் துன்பப்பட்டுத் தன்னுடைய நிலைமையை மற்றையோர் கண்டுகொள்ளாதபடி கண்களைத் தண்பனி நீரினாற் கழுவிச் சுத்தப்படுத்திக்கொண்டு விருந்துச் சாலைக்குச் சென்றாள். அங்கு ஜமீன்தாரும் மற்றும் பிரபுக்களும் சம்பாஷித்துக் கொண்டிருப்பதையும் அருட்பிரகாசம் அவ்விடத் தில்லாதிருப்பதையும் கண்டாள். சிறிதுநேரஞ் சென்றபின் அவன் வெளியினதும் துக்கம் நிரம்பியதுமானமுகத்தோடு ஆண்தன்மையுடையவனய்அங்கு வந்தான். அவனுடைய முகம் குளிர்ச்சியாயிருக்கவில்லை. அடர்த்

தியானமீசை கண்களின் வெளுப்பைக் காட்டியது. தெய்வத்தன்மை பொருந்திய கட்புருவத்தைச் சுற்றியிருக்கும் கரியகேசங்கள் பிரகாசத்தைக் காட்டின. அவனுடைய நடை மெதுவாயும் அழகாயு மிருந்தது. முகத் தோற்றம் பார்ப்பவர்களுக்கு மன ஆலோசனை நிரம்பியதாகக் காட்டியது; ஆனால் பூங்காவனத்துக்கு மாத்திரம் விட்டு நீங்காத அவனுடைய ஆழமான மனோதுக்கத்தைக் காட்டிற்று. அவனுடைய பேச்சோவென்றால் அக்காரண நிமித்தம் அடைப்பையும் ஆண்தொனியையும் காட்டிற்று. விருந்துச்சாலைக்கு மிருதுவாக வரும்பொழுது நடக்கும் சம்பாஷணைகளைப்பற்றி அவன் கொண்ட புன்னகை பனிக்கட்டியின் மேல் விழும் சூரியப் பிரபைபோல விருந்தது.

இரண்டுமணிநேரத்துள் பிரபுக்களும் சீமாட்டிகளும் முறைமைப்படி விருந்தருந்தினார்கள். கொண்டாட்டம் நடக்கும்பொழுது அருட்பிரகாசம் பெரிய தாயாருடன் நடந்துகொண்ட திருப்தியீனமானமாதிரியை ஜமீன்தார் மாத்திரமேயன்றி மற்றும் பிரபுக்களும் இவர்களுக்கிடையில் ஏதோவெறுப் பிருக்கிறதாக அனுமானித்தார்கள். ஆனால் இதைப்பற்றி ஒருவரும் ஒன்றும் சொல்லாமல் சந்தேகமான பார்வை பார்த்தார்கள். அருட்பிரகாசம் பெரிய தந்தையாரின் விவாகத்தில் தமையனைப்போலல்லாமல் பொறுமை கொண்டானென்றும், அவருடைய மனைவி தாங்கிக்கொள்ளக் கூடாத அவ்வளவாய் அதைப் பொறுத்து நடக்கின்றனளென்றும் கவனித்தார்கள். இவையெல்லாவற்றையும் கவனித்த ஜமீன்தார் அற்பகாரியங்களில் தீர்மானம் பண்ணக் கூடாதென்று எண்ணிக்கொண்டார். அப்பொழுது அருட்பிரகாசம் அவருக்குச் சமீபத்தில் வந்து நின்று பெரியபிதாவே! தாங்கள் கருணைகொண்டு செலவுக்குத் தரும் பணத்தை முறைக்கு முறை கூட்டித் தருகின்றீர்கள். அதற்கு நான் என்றும் நன்றியறிதலுள்ளவனாகவிருக்கின்றேன். இன்னும் தற்போது தங்கள் தரிசனையின் பொருட்டு இங்குவந்தபொழுதும் தாங்கள் என்மீது கொண்ட அபிமானத்தினாலும் அன்பினாலும் பெருமையடைந்தவனாகவே யிருக்கின்றேன். இதை எப்பொழுதும் மறக்கமாட்டேன்; அப்படி மறந்தால் கடவுள் தப்பாது தண்டிப்பார் என்று கூறினான். அப்பொழுது அவர் தம்மனதில் ஆ! இவனைப்போலும் மகாசால சீல தந்திரக்காரனைக் காண்பது அரிது; தன்மனத்தடக்கிய பொறுமை

யை என் நாயகியிடங் காட்டிவிட்டபடியால் அதைநிவிர்த்தி பண்ணும்படி என்னிடம் சாதுரியமாகப் பேசுகின்றான் என்று எண்ணினார். அப்படியிருந்தும் அருட்பிரகாசத்தின் முகத்தோற்றத்தில் ஒருவிதமான சாலமில்லையென்றும் கவனித்து ஆச்சரியப்பட்டார். அவன் மீண்டும் அண்ணலே! தாங்கள் என்னைச் சில காலம் இங்கு நிற்கும்படி கூறுகின்றீர்கள்; ஆனால் இந்நாட்டில் நிற்க எனக்கு அற்பமேனும் விருப்பமில்லை; ஏனெனில் நான் சில காலமாகப் பிறதேசசஞ்சாரியாகத் திரிந்ததில் எனக்குப் பழக்க வழக்கங்கள் மாறிவிட்டன. இந்நாட்டுப் பழக்கவழக்கங்கள் தற்காலம் எனக்கு உதவமாட்டா; ஆகையால் தாங்கள் வாங்கித்தருவதாகக் கூறிய திவான் உத்தியோகத்தைக் கூடிய சீக்கிரம் பெறும்படி செய்யுங்கள். இப்பொழுதேனும் நான் பிரயாணத்துக்கு ஆயத்தமுடையவனாயிருக்கின்றேன்; நான் இவ்விடத்துக்கு வந்தது தங்களுக்கு ஸ்துதியுடன் நன்றியறிதல் கூறவும் தங்கள் புதியநிலைமையைக் கண்டு களிக்கவுமே என்றான்.

மா. சிவராமலிங்கம் பிள்ளை,
ஆறுமுகநாவலர் வாசகசாலை,
வண்ணார்பண்ணை போஸ்டு.

ஸ்நேகலதாதேவியின் தற்கொலை.

கல்கத்தா, ராஜா ரஜுபல்லோ வீதியிலிருக்கும் ஹரேந்திரசந்திர முக்கர்ஜி என்பவருடைய 14-வயதுள்ள பெண் ஸ்நேகலதாதேவி யென்பவள் ஜனவரி மாதம் ஒரு நாளிரவு தன்னுடைய அறையில் கதவைத் தாளிட்டுக்கொண்டு தீ மூட்டிக்கொண்டாள். அடுத்த வீட்டுக்காரர் வீட்டின் கூரையிலிருந்து புகை வருவது கண்டு பெண்ணின் தகப்பனருக்கறிவித்தனர். அவர் வீட்டின் கூரைவழியாய் உள்ளே சென்று பார்த்தபோது தம்முடைய குமாரத்தி தீயால் தகிக்கப்பட் டிருப்பதைக்கண்டு அவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயினர். அங்கு அவளிறந்து போனாள்.

தன் கலியாண நிமித்தம் தந்தைக்கு வரவிருந்த சரித்திரத்தில் நின்றும் அவரைக் காப்பாற்றுவதன் பொருட்டுத் தன்னுயிரை அக்கினிக்கிரையாக்கிய இப்புண்யவதியின் சரிதை எங்கும் பிரசித்தமடைந்துவிட்டது. அம்மாது சிரோமணி வரதக்ஷிணையாகிய துர்த்தேவதையின் உபத்திரவத்தி லிருந்து பாரதமாதாவை நிவிர்த்தி செய்யும்பொருட்டுத் தன் ஆவியை அக்கினி பகவானுக்குத் தத்தம் செய்வதற்கு முன் தன தருமைத் தந்தையார்க்கு எழுதிவைத்த கடிதத்தின் மொழிபெயர்ப்பை இங்கு எழுதுவாம். பாரதமாதா இந்த நரபலியை அந்தத் துர்த்தேவதைக்கு இட்டபின்னராவது அவள் திருப்தியடைந்து விட்டு விலகுவாளோ, இன்றேல் இன்னும் நம்மைப் பீடிப்பாளோ நாம் அறியோம்.

மேற்குறித்த கடிதம் பின்வருமாறு:—

"அதிமேன்மை பொருந்திய தந்தாய்! என் விவாக நிமித்தம் நமது வீட்டைக் கொதுவைவைப்பதாகத் தாங்கள் செய்திருக்கும் தீர்மானம் எனக்குச் சற்றும் ஸம்மதமில்லை. உங்க ளிஷ்டப்படி செய்ய நான் உங்களை விடேன். உங்களுக்கு அத்தகைய அவசியம் வராமலே நான் பார்த்துக் கொள்வேன். ஏனெனின், நாளை கதிரவ னுதிக்குமுன், நிர்ப்பாக்கியை யாகிய உங்கள்மகள் இவ்வுலகச் சந்தடி சற்றும் அணுகாத விடத்துக்குப் பறந்துபோயிருப்பாள்."

"என்னை அதிசெல்வமாய் வளர்த்துவிட்டீர்கள். கொடிபோன்ற அற்பமான என்னன்பை ஆண்மைதங்கிய தங்களுடைய இருதயத்தைச் சுற்றி வளரவிட்டீர்கள். ராஜகுமாரிகளுக்கும் பெறுதற்கரியபாக்கியத்தை என் பெற்றோர்களிடத்தில் அடைந்து ஆநந்தஸாகரத்தில் மூழ்கியிருந்தேன். தங்களிடத்திருந்து அத்தகைய மேன்மையடைந்த நானோ தங்களுக் கிருக்கும் ஸுகத்தை வேரோடறுத்துத் தங்களைச்சந்தியில் நிறுத்துவதற்குத் தோன்றிய கோடரியாவேன்?"

"மூன்றுநாள் காலை முதல் மாலைவரை அலைந்து இளைத்துக் களைத்து வாடின முகத்தோடு நீங்கள் வீடு வந்து சேர்ந்தபோது உங்கள் முகத்தில் எழுதப்பட்டிருந்த கிலேசத்தை நான் கண்டேன். வீடுவந்ததும் 'எல்லாம் போயிற்று' என்றீர்கள். அப்போது காணப்பட்ட உங்கள் முகம் என் மனத்தைக் கவர்ந்து என் மனத்தைவிட்டுக் கணநேரமும் அகலாமல் ஒரு ஆவேசம் போல் எங்கும் தொடருகிறது. அந்த வார்த்தைகள் என்காதில் இன்னும் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன. அப்போது நீங்கள் சொன்னவையெல்லாம் என் மனத்தை விட்டகலவேயில்லை.கடைசியாக வீட்டைக் கொதுவை வைப்பதைத்தவிர வேறுவழியில்லையென்றுசொன்ன வார்த்தைகள் என்காதில் நாராசம்போல் நுழைந்தன."

"தந்தாய்! நானதைச் சகியேன். எனக்குக் கலியாணத்தா லென்ன பயன்? அதுவிஷயமாய்த் தங்கள் மனதிலுள்ள ஒரு பெரும் விசாரம் நீங்கும் என்ற ஒரு விஷயந்தானதிலுள்ளது. இதுவரையில் எனக்கு விவாகமாகாததன் நிமித்தம் தாங்கள் என்னென்ன வார்த்தைகளெல்லாம் உலகத்தினிடத்தி லிருந்து கேட்டீர்கள். எனக்கு ஒரு மாப்பிள்ளை தேடத் தாங்கள் பகீரதப் பிரயத்தனங்களெல்லாம் செய்தீர்களே! என்னபயன்? நமது முன்னோர்கள் கட்டிய வீட்டில் அன்னியர் காலடித் தூசிகூடப் பட நான் ஸம்மதியேன். அருமைத் தந்தையே! வரதக்ஷிணையாகிய ப்ரமராக்ஷஸுக்கு ஏற்பட்ட பலி நீங்களல்ல, நானே. பரத்வானில் வந்த வெள்ள விபத்தில் நஷ்டமடைந்தவர்களின் உதவிக்கு உதாரகுண முள்ள பலவாலிபர்கள் முன்வந்தாரென்று கேட்டேன். தம்முயிர் போலப் பிறவுயிரையும்கருதின இந்த மகான்களுக்கு ஈச்வரக்ருபை பரிபூரணமாய் இருக்கட்டும். இன்னும்

அநேகபுருஷர்கள் அந்நிய தேசத்துப் பொருள்களை ஒருபோதும் வாங்குவதில்லையென்று ப்ரதிக்ஞைசெய்து கொண்டிருக்கின்றாரென்றுங் கேட்டேன். தென் ஆப்ரிக்காவில் உபத்திரவப்படும் நமது தேசத்தாருடைய ஸகாயத்துக்காக வீடுவீடாய் அலைந்து கஷ்டப்பட்டுப் பொருள்சேகரித்த வாலிபர்களுடைய பெருந்தகைமையும் கேட்டேன். இத்தனைபேர்களுள் தங்கள் போன்ற ஜனங்கள்படும் கஷ்டத்தை நிவிர்த்திப்பவர் ஒருவருமில்லையோ?''

''நேற்று ராத்திரி நான் ஒரு கனாக்கண்டேன். அதன்பயனாக என் ப்ரதிக்ஞையைச் செய்துகொண்டேன். ஒருபொழுதும் கேட்டிராத இனிய வாத்திய கோஷத்தோடும் நிலத்திலும் நீரிலும் பார்த்திராதஒரு குளிர்ந்த ஜோதியோடும் திருமுகத்தில் மந்தகாசத்தோடும் அம்பிகை, துர்க்கை, புண்யாத்மாக்க ளிருக்குமிடமாகிய தன்னுலகத்துக்கு வரும்படி எனக்குச் சாடைகாட்டினாள். அப்போது, என்ஐயனே! தங்கள் ஞாபகம்வந்தது; என் அருமைத் தாயின் முகமும் நமது வீட்டிற் களிப்பைப் பெருக்கிக்கொண்டிருக்கும் அறியாப் பாலர் முகங்களும் என் மனத்துக் கெதிரே நின்றன. உங்கள் ஒவ்வொருவருடைய ஸுகங்களையும் கெடுப்பதற்கு நான் கருவியாவதில்லையென்று ஸங்கற்பித்துக்கொண்டு தன் ஆக்ஞையை நொடியளவும் தாமதமின்றி நிறைவேற்றவேனென்று லோகமாதாவுக்கு உத்தரம் உரைத்தேன்.''

''அப்பா! நான் போனபிறகு என் மரணத்தைப்பற்றி நீங்கள் ஒவ்வொருவரும் கண்ணீர் சொரிந்து கதறுவீர்கள் என்பது எனக்கு நிச்சயமாய்த்தெரியும். நான் இருக்கமாட்டேன். ஆனால் வீடுதக்கும். அந்தநிமிஷம் முதல் என் உலக யாத்ரையை எப்படி முடிப்பது? தீயா, நீரா, விஷமா எதுஉசிதமென் றாலோசித்தேன். கடைசியாக அக்நிபகவானையே வரித்தேன். ஏனெனின், என் சரீரம் தகிக்கப்படும்போ துண்டாகும் தீ பாரத கண்டமுழுவதிலும் பரவட்டுமென்று தான்.''

''அருமைத் தந்தாய்! நமஸ்காரம், போய்வருகிறேன். உலகமெல்லாம் அயர்ந்து தூங்குகிறது. ஒரு பொழுதும் விழிப்படையாததூக்கத்தை நானும் அடையப்போகிறேன். என்னையறியாமல் ஒரு ஆநந்தம் என்மனத்தைச் சூழ்ந்திருக்கிறது. எனது புது வீட்டில் அம்பாளின் பாதாரவிந்தங்களில் தங்கள்மடியில் படுத்து விளையாடினதுபோல் சிலநாள் பொறுத்து தந்தாங்களும் எனது அன்பான அன்னையும் அவ்விடம் வருவதை எதிர்பார்த்தபடி விளையாடிக் கொண்டேயிருப்பேன்.''

(தங்கள் நிர்ப்பாக்கிய குமாரி, ஸ்நேகலதாதேவி).

ஒருநிருபன்.